குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.11/2022

ம.சா. 1

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25–ம் தேதி சனி கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சூர்யசேகர் | தொழில் | |
| தந்தை பெயர் | நாராயணசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.15 மணி,

Complainant Suryasekar present. Advocate Mr.A.Vasanthan present for Advocate Mr.G.Karunagaran for Complainant. Accused Tamilkani present. Advocate Mr.Kamalababu present for Accused.

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) என்னுடைய குற்றப்பல்வகை மனு 758/2025 மனுவில் எந்த ஆவணங்களை தாக்கல் செய்வதாக குறிப்பிடவில்லை என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள வருமான வரி கணக்கு, உள்ளிட்ட ஆவணங்கள் அசல் ஆவணங்களை இல்லை என்றால் கணினி நகல் ஆகும். SBI வங்கி மற்றும் யூனியன் வங்கியின் கணக்கு பட்டியலை தாக்கல் செய்த நிலையில் மேற்படி வங்கிகளை புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் பொய்யான ஆவணங்கள் என்றால் சரியல்ல, வங்கியில் நான் கடிதம் அளித்த அடிப்படையில் எனக்கு வங்கியில் இருந்து கொடுத்த ஆவணங்களை பிரிண்ட்அவுட் எடுத்து இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

2) நான் தாக்கல் செய்துள்ள வங்கி கணக்கு பட்டியலில் வங்கியின் முத்திரை மற்றும் வங்கி மேலாளரின் கையொப்பம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல, என்னுடைய கடிதத்தின் அடிப்படையில் எனது E.mail லுக்கு வங்கியால் அனுப்பப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன், வங்கியின் முத்திரையோடு ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். ஆஜர் எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றாலும் அவரிடம் இருந்து பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.27 மணி.

Sd/.S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.